**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**அசல் வழக்கு எண். 118/2023**

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07 ஆம் நாள் செவ்வாய் கிழமை

பி.வா.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு.எம். மகேஷ், இளநிலை உதவியாளர், அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ரஷீதா | க/பெ.: | அப்துல் காதர் |
| கிராமம்: | முத்துப்பேட்டை | தாலுக்கா: | முத்துப்பேட்டை |
| மதம்: | முஸ்லீம் | தொழில்: | பெட்டிக்கடை |
| வயது: | 50 | முகவரி: | முத்துப்பேட்டை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 07.04.2026.

**முதல் விசாரணை :–**

நான் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. 25.12.2020–ல் வாதி, எனது வீட்டை இடித்து சேதமடித்தது தொடர்பாக முத்துப்பேட்டை காவல் நிலையத்தில் நான் கொடுத்த கை நகல் **பி.வா.சா.ஆ.1** ஆகும். 25.12.2020–ல் நான் கொடுத்த புகார் மனுவை ஏற்றுக்கொண்டு முத்துப்பேட்டை காவல் நிலையத்தில் வழங்கிய புகார் மனு ஏற்பு ரசீது அசல் **பி.வா.சா.ஆ.2** ஆகும். 27.11.2024–ல் தேதியிட்ட மின்கட்டண ரசீது அசல் **பி.வா.சா.ஆ.3** ஆகும். 12.10.1988–ல் நான் தாவா சொத்தை அப்துல் ஹமீர் என்பவரிடம் இருந்து கிரயம் பெற்றேன். அந்த கிரய பத்திரத்தின் நகல் தாக்கல் செய்கிறேன். தாவா சொத்திற்குண்டான சிட்டா நகல் தாக்கல் செய்கிறேன். வாதி எனது வீட்டை சேதப்படுத்தியது மற்றும் ஆவணங்களை தீயிட்டு

கொழுத்தியது தொடர்பாக எடுக்கப்பட்ட புகைப்படங்கள் (எண்ணிக்கை– 11) தாக்கல் செய்கிறேன். 25.01.2021 தேதியிட்ட எனது வீட்டிற்குண்டான வீட்டு வரிரசீது –1 அசல் **பி.வா.சா.ஆ.4** ஆகும்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் மேற்கொண்டு ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகோளின் பேரில் முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது:–**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.